2023 ஏப்ரல் 19] [திரு. எஸ். காந்திராஜன்]

எதிர்காலத்தில் இப்பகுதி பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்தைப்போன்று துறையின் வல்லுநர்களின் மூலமாக நடவடிக்கையை மேற்கொண்டு இந்த வெடிச் சத்தம் மற்றும் நில அதிர்வுக்கான தீர்வை விரைந்து காண வேண்டுமென்று மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது சார்பிலும், மாண்புமிகு பழனி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்களின் சார்பிலும் தங்கள் வாயிலாகத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–30

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான், மாவட்ட ஆட்சித் தலைவரிடம், பல தடவை வெடிச் சத்தம் வருவதற்கு என்ன காரணம் என்பதை ஆராய்ந்து பார்க்கச் சொன்னதில், அந்தப் பகுதி முழுவதிலும்* mines *இல்லை; ஆனால், சத்தம் வருகிறது என்று மாவட்ட ஆட்சித் தலைவரும் சொல்லியிருக்கிறார். சென்ற ஆண்டில் மட்டும் 15 தடவை இதேபோல வந்திருக்கிறது என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எங்களுக்குக் கடிதம் மூலமாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இப்போது எங்களுடைய கவனம், தேசிய நிலநடுக்க மையத்தின் நிபுணர்களை வைத்து ஆராய்ச்சி செய்தால்தான் அதற்கு ஒரு தீர்வு வரும் என முடிவு செய்து அதற்கு வேண்டிய அறிக்கை தயார் செய்வதற்கு நிபுணர்களை அழைத்திருக்கிறோம். அவர்கள் வந்து அறிக்கை கொடுக்கும் நேரத்தில் இதற்கொரு முடிவான பதிலை அல்லது நிறைவான வேலைகளை இந்த அரசாங்கம் செய்து கொடுக்கும்.*

(ஆ) வணிக வரி நிலுவையை வசூலிக்க சமாதான் திட்டம் கொண்டு வருவது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வணிக வரி நிலுவையை வசூலிக்க சமாதான் திட்டம் கொண்டு வருவது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று உறுப்பினர்களின் மேசையின்மேல் உள்ள சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

சரக்குகள் மற்றும் சேவைகள் மீதான வரி விதிப்பானது 2017 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 1 ஆம் நாளன்று அறிமுகம் செய்யப்பட்டது. அதன்படி நீக்கம் செய்யப்பட்ட

(i) 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம்,

(ii) 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரிச்) சட்டம்,

(iii) 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம்,

(iv) 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பரங்கள் வரிச் சட்டம்,

(v) 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிகளுக்குள் சரக்குகள் நுழைவுமீது வரிச் சட்டம்,

(vi) 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிகளுக்குள் இயக்கூர்திகள் நுழைவின்மீது வரிச் சட்டம்,

(vii) 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம்,

(viii) 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டம்,

(ix) 1935 ஆம் ஆண்டு தமிழ்நாடு பந்தைய வரிச் சட்டம், மற்றும் தற்பொழுது நடைமுறையில் உள்ள

(x) *2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம்,*

(xi) *1956 ஆம் ஆண்டு மைய விற்பனை வரிச் சட்டம்*

ஆகியவற்றின்படி பெருமளவிலான வரி, தண்டம் மற்றும் வட்டி ஆகியவை நிலுவையில் உள்ளன. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், சட்டப் பிரிவு 19(4), 19(5), 19(11) மற்றும் 19(20) ஆகியவற்றின்கீழ் உள்ளீட்டு வரி வரவு திருப்பத்தினாலும் மற்றும் வாகனங்கள் மற்றும் பொருட்கள் மீதான நுழைவு வரி விதிப்பு போன்ற சட்டங்கள் நீதிமன்றங்களால் உறுதி செய்யப்பட்டதாலும், கடந்தகால கேட்புகள் அதிகரித்துள்ளன.

இதனைக் கருத்தில் கொண்டு, 2021 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள் 13 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவையில் 2021–2022 ஆம் ஆண்டுக்கான திருத்திய வரவு–செலவுத் திட்ட அறிக்கையில், தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி உள்ளிட்ட பழைய வரிகளில் நிலுவையிலுள்ள 28 ஆயிரம் கோடி ரூபாயை வசூலிக்க எளிமையாக, அரசுக்கு பலனளிக்கக்கூடிய விதமாக, மீண்டும் சமாதான் திட்டம் அறிமுகம் செய்யப்படும் என மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

அதற்கிணங்கிய வகையில் அரசானது, தமிழ்நாடு வணிக வரிகள் (நிலுவைகள் தீர்ப்பு) சட்டம் என்ற சட்டத்தை இயற்றுவதன் மூலமாக மேற்சொன்ன அறிவிப்பிற்குச் செயல் வடிவம் கொடுப்பதென முடிவு செய்து, தற்பொழுது அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021–2022 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு–செலவுத் திட்ட அறிக்கையில், தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி உள்ளிட்ட பழைய வரிகளில் நிலுவையிலுள்ள சுமார் 28 ஆயிரம் கோடி ரூபாயை வசூலிக்க எளிமையாக, அரசுக்கு பலனளிக்கக்கூடிய விதமாக, மீண்டும் சமாதான் திட்டம் அறிமுகம் செய்யப்படும் என மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. கடந்த காலங்களில் 6 முறை சமாதான்*

திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. 1999, 2002, 2006, 2008, 2010 மற்றும் 2011 ஆண்டுகள் என ஒவ்வொரு முறையும் சமாதான் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டபோது, வசூல் செய்யப்பட்டுள்ள தொகை எவ்வளவு, பழைய சட்டங்களான தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், மைய விற்பனை வரிச் சட்டம் உள்ளிட்ட சட்டங்களின்கீழ் நிலுவையில் உள்ள தொகை எவ்வளவு என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமாதான் திட்டம் என்பது முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் சிந்தனையில் உதித்த சீரிய திட்டமாகும். வணிக வரித் துறையில் நிலுவையில் உள்ள வரி நிலுவைகளைச் செலுத்தி தீர்ப்பதற்காக வணிகர்களுக்கு ஒரு வாய்ப்பளிக்கும்பொருட்டு, ஒருமுறை தீர்வுத் திட்டமான சமாதான் திட்டம் முதன்முதலாக முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் 1999 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்குப் பின்னால், 2002 ஆம் ஆண்டு, 2006 ஆம் ஆண்டு, 2008 ஆம் ஆண்டு, 2010 ஆம் ஆண்டு மற்றும் 2011 ஆகிய ஆண்டுகளில் சமாதான் திட்டம் செயல்படுத்தப்பட்டு, அதன் மூலமாக வணிகர்களின் நீண்டகால வரி நிலுவைகள் கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டம் 1999 ஆம் ஆண்டு முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டபோது, 4 மாதங்களில் 2 ஆயிரத்து 95 மனுக்கள் பெறப்பட்டு, ரூபாய் 19.97 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. 2002 ஆம் ஆண்டு 3 மாதங்களில், 2 ஆயிரத்து 383 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, ரூபாய் 58.75 கோடியும், 2006 ஆம் ஆண்டு மூன்று மாதங்களில் 1,036 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, ரூபாய் 6.98 கோடியும், 2008 ஆம் ஆண்டு 8 மாதங்களில், 10 ஆயிரத்து 250 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, ரூபாய் 85.39 கோடியும், 2010 ஆம் ஆண்டு 7 மாதங்களில், 10 ஆயிரத்து 943 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, ரூபாய் 169.69 கோடியும், 2011 ஆம் ஆண்டு 6 மாதங்களில், 8 ஆயிரத்து 349 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, ரூபாய் 100.33 கோடியும் கடந்த காலங்களில் வசூல் செய்யப்பட்டுள்ளன. தற்போது வரி

நிலுவையாக தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்கீழ் ரூபாய் 16 ஆயிரத்து 732.39 கோடியும், மைய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் ரூபாய் 6 ஆயிரத்து 532.75 கோடியும், தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் ரூ.4 ஆயிரத்து 107.85 கோடியும், தமிழ்நாடு ஆடம்பரங்கள் வரிச் சட்டத்தின்கீழ் ரூ.94.36 கோடியும், தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிகளுக்குள் இயக்கூர்திகள் நுழைவின்மீதான வரிச் சட்டத்தின்கீழ் ரூ.39.16 கோடியும், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின்கீழ் ரூ.14.49 கோடியும், தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் சரக்குகள் நுழைவுமீது வரிச் சட்டத்தின்கீழ் ரூ.5.59 கோடியும், தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டத்தின்கீழ் ரூ.17 இலட்சம், ஆக மொத்தம், ரூ.27,526.82 கோடி வரி நிலுவையில் உள்ளது.

முற்பகல் 11–35

இந்நிலையில் கடந்த 13–8–2021 அன்று சட்டமன்றப் பேரவையில் சமாதான் திட்டம் அறிமுகம் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டதற்கு, செயல் வடிவம் கொடுக்கும் வகையில், அரசு முதன்மைச் செயலாளர்/வணிக வரி ஆணையர் அவர்களிடமிருந்து 11–10–2021 அன்று உரிய கருத்துரு பெறப்பட்டு, சமாதான் திட்டத்தை நடைமுறைப்படுத்த தமிழ்நாடு வணிக வரிகள் (நிலுவைகள் தீர்ப்பு) சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டு, அந்தச் சட்டத்தை இயற்றுவதன் மூலமாக மேற்சொன்ன அறிவிப்புக்கு செயல் வடிவம் கொடுக்கப்படுவதென முடிவு செய்து, தற்போது நடவடிக்கையில் உள்ளது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வியாபாரிகளிடமோ, பொதுமக்களிடமோ வரி வசூல் செய்வது என்பது, பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதைப்போல, மலரிலிருந்து தேனை வண்டுகள் சுவைப்பதைப்போல வலியில்லாமல் இருக்க வேண்டும். வட்டி, அபராத வட்டி, தண்ட வட்டி போன்றவற்றையெல்லாம் நீக்கி, வரியை வசூலித்தால் அரசுக்குப் போதுமான வருமானம் கிடைக்கும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

[முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்] [*2023 ஏப்ரல் 19*

கடந்த ஆறு முறை சமாதான் திட்டம் செயல்படுத்தும்போது, அந்தந்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையில் அறிவிக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே சமாதான் திட்டம் செயல்படுத்துவதற்கான சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டு, உடனடியாகத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், தற்போது இரண்டு ஆண்டுகள் முடிந்துவிட்டன. எனவே, அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கான காலதாமதத்திற்குக் காரணம் என்ன? உடனடியாக நடவடிக்கை எடுத்து சமாதான் திட்டத்தை விரைவில் செயல்பாட்டிற்குக் கொண்டுவந்து, வணிகர்களையும், உற்பத்தியாளர்களையும், பொதுமக்களையும் இந்த அரசு காப்பாற்றுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையில் சமாதான் திட்டம் அறிமுகம் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டதற்கு, செயல் வடிவம் கொடுக்கும் வகையில், தமிழ்நாடு வணிக வரிகள் (நிலுவைகள் தீர்ப்பு) சட்டமுன்வடிவு, சட்டமன்றப் பேரவையில் கடந்த ஆண்டு பட்ஜெட் கூட்டத் தொடரிலே அறிமுகம் செய்வதற்கான சுற்றோட்டக் கோப்பு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர், மாண்புமிகு முதலமைச்சர் ஆகியோரின் வழியாக மாண்புமிகு ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. மாண்புமிகு ஆளுநர் அவர்கள் கடந்த ஆண்டு 10-5-2022 அன்று அக்கோப்பிற்கு ஒப்புதல் வழங்கினார்கள். அன்றையதினம் 2022-2023 ஆம் நிதியாண்டில் பட்ஜெட் கூட்டத்தொடரின் கடைசி நாள் என்பதால் அந்தச் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய இயலவில்லை. எனவே, இச்சட்டமுன்வடிவினை அவசரச் சட்டமாக இயற்றலாம் என துறை உத்தேசித்து சட்டத் துறையின் இசைவினை 20-5-2022 அன்று பெற்று, வணிக வரித் துறை ஆணையரிடமிருந்து உரிய கருத்துரு பெறப்பட்டு, அச்சுற்றோட்டத்தில் ஆணை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி, 23-6-2022 அன்று மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு 24-6-2022 அன்று அனுப்பப்பட்டது.*

அவர், தலைமைச் செயலாளர், முதலமைச்சரின் செயலாளர்-II டாக்டர் உமாநாத் அவர்கள், நிதித் துறைச் செயலாளர் ஆகியோருடன் 4–7–2022 அன்று கலந்தாலோசிக்க ஏற்பாடு செய்யுமாறு வணிக வரி மற்றும் பதிவுத் துறைச் செயலாளர் அவர்களுக்கு உத்தரவிட்டார். 4–7–2022 அன்று நடைபெற்ற கலந்தாலோசனைக் கூட்டத்தில், ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் ஏற்றுக்கொள்ளப்படாத வரி விவரங்களையும் தற்போது வணிகத்தில் ஈடுபட்டுள்ள மற்றும் ஈடுபடாத வணிகர்கள் குறித்து விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

முற்பகல் 11–40

அதன்படி 22–9–2022 அன்று நடைபெற்ற கலந்தாலோசனைக் கூட்டத்தில், ஏற்கெனவே கேட்கப்பட்ட விவரங்கள் குறித்து விவாதிக்கப்பட்டபோது, கூடுதலாக சதவிகித அடிப்படையில் (Percentile Method) வரி விவரங்களையும் சேகரித்து சமர்ப்பிக்குமாறு மீண்டும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். அதன் பின்னர், 2–12–2022 அன்று நடைபெற்ற கலந்தாலோசனைக் கூட்டத்தில், 2017 ஆம் ஆண்டு வரையிலுள்ள சதவிகித அடிப்படையிலான (Percentile Method) வரி நிலுவை விவரங்கள் விவாதிக்கப்பட்டபோது, நிலுவை வரி செலுத்தியபின் எழும் வட்டி குறித்து, உள்ள நிலுவை விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்கள். இவ்விவரங்கள் குறித்து விவாதிக்க, இரண்டு நாட்களுக்கு முன்னதாக, 17–4–2023 அன்று மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் கூட்டம் நடத்தப்பட்ட நிலையில், ‘சமாதான் திட்டம்’ செயல்படுத்துவதற்கான சட்டமுன்வடிவு குறித்த கோப்பு தற்போது, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் ஒப்புதலுக்காக நிலுவையில் உள்ளது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் ஒப்புதலுக்குப் பின்னர், கோப்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்குச் சமர்ப்பிக்கப்பட்டு, அவர்களது ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே, தமிழ்நாடு வணிக வரிகள் (நிலுவைகள் தீர்ப்பு) சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு சமாதான் திட்டம் நடைமுறைப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.